செ. கு. எண்: 286 நாள் :21.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.10.2013

10.9.2013 அன்று சென்னை, தரமணி, பாரதி நகர், அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயிலில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த வேளச்சேரியைச் சேர்ந்த திரு. செல்வகுமார்;

12.9.2013 அன்று தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம், அம்மாபேட்டை, நெடுவாசல் கிராமத்திலுள்ள பள்ளி விடுதியில் ஒரத்தநாடு வட்டம், கக்கரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. திருநாவுக்கரசு என்பவரின் மகள் செல்வி சுஷ்மிதா;

14.9.2013 அன்று விவசாய நிலத்திற்கு செல்லும் போது தஞ்சாவூர் மாவட்டம், வாளமர்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தர்ராஜ் என்பவரின் மனைவி சசிகலா;

ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9